


அயலக தமிழர் சாதனை விருது 2025 நிகழ்ச்சியில் கலந்து கொள்ள லண்டன் சென்றிருக்கும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் லண்டன் நாட்டில் உள்ள அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் படித்த LONDON SCHOOL OF ECONOMICS பல்கலைக்கழகம் மற்றும் அவர் வாழ்ந்த இல்லத்தை நேரில் பார்வையிட்டு அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஐக்கிய இராஜ்ஜியம் (U.K.) நாட்டின் தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் செந்தில், கழக மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு உள்ளனர்.

### அண்ணல் அம்பேத்கரின் கனவைச் செயலாக்கும் வகையில்

# தமிழ்நாடு முதல்வரின் திராவிட மாடல் அரசு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது!

## இலண்டனில் டாக்டர் அண்ணல் அம்பேத்கரின் நினைவு இல்லத்தைப் பார்வையிட்டு – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பெருமிதம்!

லண்டன், மே 25-

இங்கிலாந்து நாட்டின், கேம்டன் நகரில், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் 1921-22 இல் லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ்ல் படிக்கும் போது வாழ்ந்த இல்லத்தினை நேரில் சென்று பார்வையிட்டபின் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பின்வருமாறு அறிக்கை அளித்தார்,

அண்ணல் அம்பேத்கருக்கு சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது என்று சொன்னார் தந்தை பெரியார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக அம்பேத்கர் பெயரில் அரசு கல்லூரியை கொண்டு வந்தது தி.மு.க. சென்னை சட்ட பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரை சூட்டியவர் கலைஞர்.

சென்னை பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரை சூட்டியவர் கலைஞர். அம்பேத்கர் பிறந்தநாளை சமத்துவ நாளாக கொண்டாட உத்தர விட்டது திமுக அரசு.

அண்ணல் அம்பேத்கரின் பெயரை மராத்வாடா பல்கலைக்கழகத்துக்கு வைக்க வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொண்டபோது மகாராஷ்டிர மாநில அரசு அதனைக் கிடப்பில் போட்டது. சிலர் எதிர்த்தார்கள். வன்முறைகளில் ஈடுபட்டார்கள். அண்ணல் அம்பேத்கர் பிறந்த மராட்டிய மாநிலத்திலேயே இந்த நிலைமை இருந்தது.

மராத்வாடா பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டும் என்று தமிழ்நாட்டில் இருந்து தந்தி அனுப்ப வேண்டும் என்று கலைஞர் உத்தரவிட்டார். உடனடியாகப் பல்லாயிரக்கணக்கான தந்திகள் போனது. அப்பொழுது அந்த மாநிலத்தினுடைய ஆளுநர் அலெக்சாண்டர். அப்போது அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் சரத்பவார் கலைஞருக்குப் பதில் அனுப்பினார்கள். 'பெயரைச் சூட்டுவோம்' என்று அறிவித்தார்.

1989ஆம் ஆண்டு நூற்றாண்டு கண்ட சென்னை சட்டக் கல்லூரிக்கு 'டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி' என்று பெயர் சூட்டியவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர். 1997ஆம் ஆண்டு சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உருவாக்கியவரும் தலைவர் கலைஞர் தான்.

மராட்டியத்தை விடத் தமிழ்நாட்டில் அம்பேத்கர் புகழ் பரவக் காரணமே திராவிட இயக்கம்தான். அம்பேத்கரின் 'சாதியை ஒழிக்கும் வழி' என்ற நூலை 1936ஆம் ஆண்டே தமிழில் மொழிபெயர்த்து புத்தகம் போட்ட இயக்கம், திராவிட இயக்கம்.

சுயமரியாதை இயக்க மாநாட்டுக்கு அம்பேத்கரை அழைத்து, அவர் வர இயலாத சூழ்நிலையில் மராட்டியத்தில் இருந்து எம். ஜெயகரை அனுப்பி வைத்தவர் அம்பேத்கர். அந்தளவுக்கு அம்பேத்கரை விதைத்தது திராவிட இயக்கம்தான் என்பதை மறந்துவிட முடியாது.

நீங்கள் தமிழ்நாட்டுக்கு வந்து எங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும்" என்று சிலர் கோரிக்கை வைத்த போது, "உங்களுக்குத்தான் பெரியார் ராமசாமி இருக்கிறாரே? அவரை வைத்து இயக்கம் நடத்துங்கள்" என்று சொன்னவர் அண்ணல் அம்பேத்கர்.

1969ஆம் ஆண்டு முதல்முதலில் முதலமைச்சரான தலைவர் கலைஞர் தான் ஆதிதிராவிடர் நலத்துறையையும் பிற்படுத்தப்பட் டோர் நலத்துறையையும் தனித்தனியே உருவாக்கினார்கள். அதற்கென்று அமைச்சர்களை நியமித்தார்கள்.

பட்டியலின மக்களுக்கு 18 விழுக்காடும் , பழங்குடியினருக்கு 1 விழுக்காடும், பிற்படுத்தப்பட்டோருக்கு 31 விழுக்காடும் வழங்கிய தலைவர் தான் நம்முடைய தலைவர் கலைஞர்.

அம்பேத்கர் கனவை செயலாக்கும் வகையில் திமுகவின் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு செயல்படுகிறது.

இறையான்மை, சமதர்மம், மத சார்பின்மை, மக்களாட்சி நான்கும் இணைந்து பயணிக்கும் குடியரசாக இந்தியா இருக்க வேண்டும் என்பதே அம்பேத்கர் கனவு. அத்தகைய அம்பேத்கரின் எண்ணங்களை பிசகாமல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசு நிறைவேற்றுகிறது

வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்" என முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்தார்கள்,

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் அன்றும் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து, "சமத்துவநாள் உறுதி மொழி" ஏற்றுக் கொண்டு வரப்படுகிறது.

சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி, ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும், வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய,

நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களை பின்பற்றி, சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க,

நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும், சகமனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமல், சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்க என்றும் உறுதி ஏற்போம், என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்.

### 2026-பொதுத்தேர்தலை முன்னிட்டு 5 சட்டமன்றத் தொகுதி வாரியாக தேர்தல் பணிக்குழு அமைப்பது குறித்து

# வேலூர் மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி , பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



*வேலூர், மே 25 -*

வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

நடைபெற உள்ள 2026சட்டமன்ற தேர்தலில் கழகம் நிறுத்தும் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற ஏதுவாக 5 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள கீழ்க்கண்ட அமைப்புகளில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரலின்படி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

25.05.2025 இன்று கீ.வ.குப்பம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குடியாத்தம் வடக்கு ஒன்றியம், காலை 09.00 மணி, குடியாத்தம் தெற்கு ஒன்றியம் காலை 09.30 மணி, குடியாத்தம் கிழக்கு ஒன்றியம் காலை 10.00 மணி, கீ.வ. குப்பம் மேற்கு ஒன்றியம் முற்பகல் 10.30 மணி, கீ.வ. குப்பம் மத்திய ஒன்றியம் முற்பகல் 11.00 மணி, கீ.வ. குப்பம் கிழக்கு ஒன்றியம் முற்பகல் 11.30 மணிக்கும்,

அதேபோன்று குடியாத்தம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பேர்ணாம்பட்டு கிழக்கு ஒன்றியம் பகல் 12.00 மணி, பேர்ணாம்பட்டு மேற்கு ஒன்றியம் பகல் 12.30 மணி, பேர்ணாம்பட்டு நகரம் பகல் 01.00 பணி, பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம் பகல் 01.30 மணி, குடியாத்தம் நகரம் பகல் 02.00 பணி, குடியாத்தம் மேற்கு ஒன்றியம் பகல் 02.30 மணிக்கும்,

அதேபோன்று அணைக்கட்டு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அணைக்கட்டு மேற்கு ஒன்றியம் மாலை 04.00 மணி, ஒடுக்கத்தூர் பேரூர் மாலை 04.30 மணி, அணைக்கட்டு மத்திய ஒன்றியம் மாலை 05.00 மணி, பள்ளிகொண்டா பேரூர் மாலை 05.30 மணி, அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம் மாலை 06.00 மணி, கணியம்பாடி தெற்கு ஒன்றியம் மாலை 06.30 மணி, பென்னாத்தூர் பேரூர் இரவு 07.00 மணி, வேலூர் ஒன்றியம் இரவு 07.30 மணி, அல்லாபுரம் பகுதி இரவு 08.00 மணி, தொரப்பாடி பகுதி இரவு 08.30 மணிக்கும்

மேலும் 27.05.2025 அன்று வேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சத்துவாச்சாரி வடக்கு பகுதி காலை 09.00 மணி, சத்துவாச்சாரி தெற்கு பகுதி காலை 09.30 மணி, சைதாப்பேட்டை பகுதி காலை 10.00 மணி, சலவன் பேட்டை பகுதி முற்பகல் 10.30 மணி, வேலப்பாடி பகுதி முற்பகல் 11.00 மணி, சங்கரன்பாளையம் பகுதி முற்பகல் 11.30 மணி, கஸ்பா பகுதி பகல் 12.00 பணி, சேண்பாக்கம் பகுதி பகல் 12.30 பணி, தொரப்பாடி பகுதி பகல் 01.00 பணி, அல்லாபுரம் பகுதி பகல் 01.30 பணிக்கும் நடைபெறும்.

அதை தொடர்ந்து காட்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வாலாஜா மேற்கு ஒன்றியம் பகல் 02.30 பணி, காட்பாடி வடக்கு ஒன்றியம் பிற்பகல் 03.00 பணி, காட்பாடி தெற்கு ஒன்றியம் பிற்பகல் 03.30 பணி, காட்பாடி மேற்கு ஒன்றியம் மாலை 04.00 மணி, காட்பாடி கிழக்கு ஒன்றியம் மாலை 04.30 மணி, திருவலம் பேரூர் மாலை 05.00 மணி, காட்பாடி வடக்கு பகுதி மாலை 05.30 மணி, காட்பாடி தெற்கு பகுதி மாலை 06.00 மணி, காந்திநகர் பகுதி மாலை 06.30 மணி, சேண்பாக்கம் பகுதி இரவு 07.00 மணிக்கும் நடைபெற உள்ளது.

எனவே மேற்படி நடைபெற உள்ள கலந்தாலோசனை கூட்டங்களில் மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட தலைமைக்கழக தொகுதி பார்வையாளர்கள், அந்தந்த தொகுதியில் அடங்கியுள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அமைப்புகளுக்கு உட்பட்ட தலைமைக்கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகி கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### விழுப்புரம் மத்திய மாவட்டம்

# காணை கிழக்கு - கோலியனூர் மத்திய - வானூர் கிழக்கு, வானூர் மத்திய, வானூர் மேற்கு - கிளியனூர் கிழக்கு, கிளியனூர் மேற்கு - கண்டமங்கலம் வடக்கு, கண்டமங்கலம் தெற்கு, கண்டமங்கலம் மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம் மற்றும் விழுப்புரம் கிழக்கு, விழுப்புரம் மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம் - நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் விழுப்புரம் மத்திய மாவட்டத்தில் உள்ள கண்டமங்கலம் மேற்கு ஒன்றியத்தில் உள்ள வானூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாத்தூர்.வி, வாதானூர் மற்றும் எஸ்.மேட்டுப்பாளையம் ஊராட்சிகளை கண்டமங்கலம் கிழக்கு மற்றும் கண்டமங்கலம் மத்திய ஒன்றியங்களுடன் இணைத்து மூன்றாகப் பிரிக்கப்பட்டு அதற்கு புதிய ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

கண்டமங்கலம் மேற்கு ஒன்றியத்தில் மீதமுள்ள விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 12 ஊராட்சிகளை கொண்டு தொடர்ந்து செயல்படும். வானூர் கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியங்களை மூன்றாகவும், கிளியனூர் ஒன்றியத்தை இரண்டாகவும் பிரிக்கப்பட்டு அதற்கு புதிய ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவதோடு,

விழுப்புரம் நகரம் இரண்டாக பிரிக்கப்பட்டு, அதற்கு புதிய நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்டம், காணை தெற்கு ஒன்றியத்தில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 5 ஊராட்சிகளை காணை கிழக்கு ஒன்றியமாகவும், கோலியனூர் மேற்கு ஒன்றியத்தில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 8 ஊராட்சிகளை கோலியனூர் மத்திய ஒன்றியமாகவும் பிரிக்கப்பட்டு அதற்கு புதிய ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

**காணை கிழக்கு ஒன்றியம்:** 1. கோனூர், 2. வி.கொத்தமங்கலம், 3.பெரும்பாக்கம், 4. தெளி, 5.வெண்மணியாத்தூர் ஆகிய 5 ஊராட்சிகள்.

**கோலியனூர் மத்திய ஒன்றியம்:** 1. அய்யங்கோயில்பட்டு, 2.கண்டம்பாக்கம், 3. மரகதபுரம், 4. கப்பூர், 5.கொண்டங்கி, 6. நன்னாடு, 7. சத்திப்பட்டு, 8. தோகைப்பாடி ஆகிய 8 ஊராட்சிகள்.

**வானூர் கிழக்கு ஒன்றியம்:** 1. கொடூர், 2. அப்பிரம்பட்டு, 3.பொம்மையார்பாளையம், 4. இரும்பை, 5.கழுப்பெரும்பாக்கம், 6.கொழுவாரி, 7. மாத்தூர், 8. நெசல், 9. ஒழிந்திராம்பட்டு, 10.திருச்சிற்றம்பலம், 11. பெரம்பை, 12. பூத்துறை, 13. இராயப்புதுப்பாக்கம், 14.துருவை, 15. வில்வநத்தம் ஆகிய 15 ஊராட்சிகள்.

**வானூர் மத்திய ஒன்றியம்:** 1. ஆகாசம்பட்டு, 2. குண்ணம், 3.கடப்பேரிக்குப்பம், 4. கரசானூர், 5.காட்டராம்பாக்கம், 6. நாராயணபுரம், 7. ஓட்டை, 8. பரங்கனி.வி, 9. ரெங்கநாதபுரம், 10.புளிச்சப்பள்ளம், 11. இராவுத்தன்குப்பம், 12. சேமங்கலம், 13. வானூர், 14.வி.புதுப்பாக்கம் ஆகிய 14 ஊராட்சிகள்.

**வானூர் மேற்கு ஒன்றியம்:** 1. இளையாண்டிப்பட்டு, 2. எறையூர், 3.சிறுவை, 4. ஐவேலி, 5. கடகம்பட்டு, 6.கோரைக்கேணி, 7. நெமிலி, 8.பரிக்கல்பட்டு, 9. பெரும்பாக்கம், 10. பொம்பூர், 11.பொன்னம்பூண்டி, 12. செங்கமேடு, 13. திருவக்கரை, 14. தொள்ளமூர் ஆகிய 14 ஊராட்சிகள்.

**கிளியனூர் கிழக்கு ஒன்றியம்:** 1. கொமடிப்பட்டு, 2. காயல்மேடு, 3.தலகாணிக்குப்பம், 4. புதுக்குப்பம், 5. காராட்டை, 6. கிளாப்பாக்கம், 7. பரங்கினி.டி, 8. நல்லாவூர், 9. உலகாபுரம், 10. பேராவூர், 11. உப்புவேலூர் ஆகிய 11 ஊராட்சிகள்.

**கிளியனூர் மேற்கு ஒன்றியம்:** 1. ஆதனம்பட்டு, 2. கீழ்கூத்தப்பாக்கம், 3. அருவப்பாக்கம், 4. கொஞ்சிமங்கலம், 5. கேணிப்பட்டு.வி, 6.கிளியனூர், 7. தென்கோடிப்பாக்கம், 8. கொந்தமூர், 9. தேற்குணம், 10. தென்சிறுவலூர், 11. தைலாபுரம் ஆகிய 11 ஊராட்சிகள்.

**கண்டமங்கலம் வடக்கு ஒன்றியம்:** 1. சித்தலம்பட்டு, 2.பக்கிரிப்பாளையம், 3. கலித்திரம்பட்டு, 4. கொடுக்கூர், 5.சேஷாங்கனூர், 6. முட்ராம்பட்டு, 7. வி.நெற்குணம், 8.பெரியபாபுசமுத்திரம், 9.திருமங்கலம், 10. வழுதாவூர், 11. மாத்தூர்.வி, 12. வாதானூர் ஆகிய 12 ஊராட்சிகள்.

**கண்டமங்கலம் தெற்கு ஒன்றியம்:** 1. கொங்கம்பட்டு, 2. கலிஞ்சிக்குப்பம், 3. கோண்டூர், 4. கிருஷ்ணாபுரம், 5.கொத்தாம்பாக்கம், 6.பள்ளிப்புதுப்பட்டு, 7. ராம்பாக்கம், 8. சொரப்பூர், 9.சொர்ணாவூர் கீழ்பாதி, 10. சொர்ணாவூர் மேல்பாதி, 11. வீராணம், 12.எஸ்.மேட்டுப்பாளையம், ஆகிய 12 ஊராட்சிகள்.

**கண்டமங்கலம் மத்திய ஒன்றியம்:** 1. தாண்டவமூர்த்திக்குப்பம், 2.சின்னபாபுசமுத்திரம், 3. ஆழியூர், 4. கண்டமங்கலம், 5.மிட்டாமண்டகப்பட்டு, 6. நவமால் காப்பேர், 7. நவமால் மருதூர், 8.பள்ளிநேலியனூர், 9. பாக்கம், 10. பள்ளித்தென்னல் ஆகிய 10 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற காணை கிழக்கு - கோலியனூர் மத்திய - வானூர் கிழக்கு, வானூர் மத்திய, வானூர் மேற்கு - கிளியனூர் கிழக்கு, கிளியனூர் மேற்கு - கண்டமங்கலம் வடக்கு, கண்டமங்கலம் தெற்கு, கண்டமங்கலம் மத்திய ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**காணை கிழக்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **ப. சந்திரசேகரன்**
விழுப்புரம் மாவட்டம்.

**கோலியனூர் மத்திய ஒன்றியம்**
பொறுப்பாளர் : **கே.என்.பி.ராஜா**
விழுப்புரம் மாவட்டம்.

**வானூர் கிழக்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **பி.கே.டி.முரளி (எ) செல்வமுத்துகுமாரசாமி**
விழுப்புரம் மாவட்டம்.

**வானூர் மத்திய ஒன்றியம்**
பொறுப்பாளர் : **திருமதி மைதிலி ராஜேந்திரன்**
விழுப்புரம் மாவட்டம்.

**வானூர் மேற்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **கோ. பாஸ்கரன்**
விழுப்புரம் மாவட்டம்.

**கிளியனூர் கிழக்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **கே.எஸ்.இராஜி**
விழுப்புரம் மாவட்டம்.

**கிளியனூர் மேற்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **ச. புஷ்பராஜ்**
விழுப்புரம் மாவட்டம்.

**கண்டமங்கலம் வடக்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **வே. கணேசன்**
விழுப்புரம் மாவட்டம்.

**கண்டமங்கலம் தெற்கு ஒன்றியம்**
பொறுப்பாளர் : **கு.செல்வமணி**
விழுப்புரம் மாவட்டம்.

**கண்டமங்கலம் மத்திய ஒன்றியம்**
பொறுப்பாளர் : **சீனு. செல்வரங்கம்**
விழுப்புரம் மாவட்டம்.

**நகரங்களுக்கு உட்பட்ட வார்டுகள்**

**விழுப்புரம் கிழக்கு நகரம் :** 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 30, 37, 42 ஆகிய 20 வார்டுகள்.

**விழுப்புரம் மேற்கு நகரம் :** 1, 11, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 31, 32, 33, 34, 35, 36, 38, 39, 40, 41 ஆகிய 22 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட விழுப்புரம் கிழக்கு, விழுப்புரம் மேற்கு ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் கிழக்கு நகரம்**
பொறுப்பாளர் : **எஸ். வெற்றிவேல்**
விழுப்புரம்.

**விழுப்புரம் மேற்கு நகரம்**
பொறுப்பாளர் : **இரா. சக்கரை**
விழுப்புரம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 24.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கள்ளக்குறிச்சி மாவட்ட ஊராட்சி அலுவலக வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 30 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச இணைப்பு சக்கரம் பொருந்திய பெட்ரோல் ஸ்கூட்டர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் நேற்று (24.05.2025) வழங்கினார்கள், இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஸ்வரி பெருமாள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், ஒன்றிய,நகர கழக செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள்,ஒன்றிய, நகர பெருந்தலைவர், துணைத் தலைவர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறை சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் என அனைவரும் உடன் கலந்து கொண்டனர்.